## O.S.No.183/2014

## Date:26.02.2019

**வாதி தரப்பு சாட்சி 5 - ஆனந்த், த-பெ.முருக பூபதி**
**குறிச்சிபட்டி கிராம நிர்வாக அலுவலர்**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

என் பெயர் ஆனந்த், என் தந்தை பெயர் முருகபூபதி. நான் குறிச்சிபட்டி கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிகிறேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். எனது தரப்பில் சா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். குறிச்சிபட்டி கிராம சர்வே எண்.129-6 தொடர்பான ஒப்படை உத்தரவின் நகல் மற்றும் ஒப்பந்த ஷரத்துக்கள் சா.சா.ஆ.1 ஆகவும், பழைய சிட்டா மற்றும் தற்போதைய கணிணி சிட்டா சா.சா.ஆ.2 ஆகவும், மேற்படி சொத்தின் அடங்கல் நகல் சா.சா.ஆ.3 ஆகவும், ஒப்படை பதிவேட்டின் நகல் ஆகியவை சா.சா.ஆ.4 ஆகவும் தாக்கல் செய்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

நான் எத்தனை ஆண்டுகளாக குறிச்சிபட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன் என்றால் கடந்த ஆறு மாதங்களாக பணிபுரிகிறேன். இந்த வழக்கின் வாதி, பிரதிவாதிகள் மற்றும் அவர்களுக்கிடையே உள்ள பிரச்சனைகள் தொடர்பாக எதுவும் தெரியுமா என்றால் வழக்கு உள்ள விபரம் மட்டும் தெரியும். மற்ற விபரங்கள் தெரியாது. தற்போது சர்வே எண்.129-6ஐப் பொறுத்து என் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட பட்டா பாஸ் புத்தகம் பி.வா.சா.ஆ.1 என்றால் சரிதான். மேற்படி பட்டா பாஸ்புத்தகம் வட்டாட்சியரின் முத்திரையோடு, பட்டாதாரரின் பெயர் உள்ளது என்றால் சரிதான். அது நாளது தேதி வரை அமலில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் பட்டாதாரரின் புகைப்படம் உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.1 ஆவணம் பற்றிய விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நேரடியாக தெரியாது, ஆனால் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 பட்டா பாஸ் புத்தகத்தில் உள்ள பதிவும், சா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள பதிவும் ஒன்றாக உள்ளது என்றால் சா.சா.ஆ.2 என்பது கிராம சிட்டா ஆகும். பி.வா.சா.ஆ.1 செல்லத்தக்கதா அல்லது சா.சா.ஆ.2 செல்லத்தக்கதா என்றால் எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ.1ல் உள்ள பதிவுகள் செல்லாது என்று சொல்ல முடியுமா என்றால் அவ்வாறு என்னால் சொல்ல முடியாது. பி.வா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆவணங்களில் உள்ள பதிவுகள் ஒன்றுதான் என்றாலும், ஒன்று புத்தக வடிவிலும் மற்றொன்று பதிவேடு வடிவிலும் உள்ளது என்றால் சரியல்ல. சா.சா.ஆ.2ன் தீர்வை ரூ.5.38 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் உள்ள தீர்வை ரூ.5.38 என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ஆவணத்தில் விஸ்தீரணம் 1.94.5 ஏர்ஸ் என்றும், பி.வாசா.ஆ.1 ஆவணத்தில் 1.95.5 ஏர்ஸ் என்றும் உள்ளதுதான் வேறு பாடு என்றாலும் வேறு வித்தியாசங்கள்

எதுவும் இல்லை என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.3 அடங்கல் ஆவணம் நான்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வட்டாட்சியர் கொடுக்கவில்லை என்றாலும் சரிதான். வருவாய்த்துறையில் நீதிமன்றத்திற்கு ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை வட்டாட்சியர்தான் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். 1428ம் பசலிக்கான அடங்கல் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சா.சா.ஆ.3 ஆவணத்தை வழங்குவதற்கு எனக்கு அதிகார வரம்பில்லை என்றால் முறையாக வட்டாட்சியரிடம் பெற்றுதான் தாக்கல் செய்ய வேண்டும். நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.3 ஒப்படை பதிவேட்டின் நகலில் சிவப்பு மையினால் தனியாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதை யார் எழுதியது என்றால் நான்தான் நேரடியாக எழுதினேன். சா.சா.ஆ.3ன்படியான ஒப்படை என்ன, அது தற்போது அமலில் உள்ளதா என்பதை பற்றி வட்டாட்சியரிடம் அறிவுரை பெற்றேனா என்றால் அறிவுரை பெற்றுள்ளேன். எழுத்துப்பூர்வமான அறிவுரை பெற்றுள்ளேனா என்றால் இல்லை. சா.சா.ஆ.3ன்படியான பதிவு தவறானது என்றாலும், மேற்படி ஆவணத்தை வழங்குவதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றாலும் சரியல்ல. சா.சா.ஆ.4 என்பது ஒப்படை நிபந்தனை பதிவேட்டின் நகல் என்றால் சரிதான். இந்த நிபந்தனை ஒப்படையில் கண்ட நபர் யார், அவரது விலாசம், அவர் எங்குள்ளார் என்ற விபரங்கள் எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. தற்போதைய நிலவரப்படி, தாவாச் சொத்து 2ம் பிரதிவாதியின் உரிமையிலும், அனுபவத்திலும் உள்ளது என்றால் தரிசாக உள்ளது, யார் உரிமையாளர் என்று தெரியாது. தாவாச் சொத்திற்கு எத்தனை வருடமாக வசூலிக்கவில்லை என்றால் வரி வசூலிக்கப்பட்டுள்ளது பற்றி தெரியாது. நான் ஆவணங்களை புரிந்து கொள்ளாமல் மிகைப்படுத்தி சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தின் உரிமையாளர் யார் என்று தெரியாது என்று சாட்சியமளிப்பது தவறானது என்றால் சரியல்ல. தாவாச் சொத்து 2ம் பிரதிவாதிக்கு உரிமை பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை என்னால் மறுக்க முடியாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நில உடைமையாளர் பெயர் என்ன உள்ளது என்றால் ராமன் மனைவி மீனாட்சி என்று உள்ளது. சா.சா.ஆ.2 ஆவணத்தில் என்ன உள்ளது என்றால் க.மீனாட்சி என்று உள்ளது.

**<u>மீண்டும் குறுக்கு விசாரணை</u>**

பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் ராமன் மனைவி மீனாட்சி என்று உள்ளது என்றால் சரிதான். அது எங்கள் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2ல் கண்ட நபர் யார் என்று சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. தற்போது என் ஒப்படைப்படி இனிஷியல் எவ்வாறு உள்ளது என்றால் க.மீனாட்சி என்று உள்ளது. க என்பதன் விரிவாக்கம் என்ன என்றால் கணபதி அய்யர் மகள் மீனாட்சி என்று உள்ளது. கணபதி அய்யர் என்பவர் யார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சில நேரங்களில் பெண்களின் இனிஷியல் குறிக்கும் போது கணவர் பெயர், தகப்பனார் பெயர் மாறி, மாறி இருக்கும் என்றால் சரிதான். ஒப்படைப் பதிவுகள் மோசடியானது என்றால் சரியல்ல.